யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

FWC

| தரம் :- 12 (2017) | கிறிஸ்தவ நாகரிகம் | நேரம் :- 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

### பகுதி - I

(01) A - உலகப்படைப்பு
B - தாவீதின் அபிஷேகம்
C - பெருவெள்ளம்
D - ஆபிரகாமின் உடன்படிக்கை
E - சீனாய் உடன்படிக்கை
மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் திருச்சபையில் தூய ஆவியின் வருகை, பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்ட ஒரு நிகழ்வுடன் தொடர்புள்ளது. அது
1) C  2) B  3) E
4) D  5) A

(02) மத்திய தரைக்கடலைச் சூழவுள்ள நாடுகளில் திருச்சபை பரப்பப்பட்டது ........................ ஆகும்.
1) பேதுருவின் மரணத்தினால்  2) கிறிஸ்துவின் மரணத்தினால்  3) யோவானின் மரணத்தினால்
4) ஸ்தேவானின் மரணத்தினால்  5) பவுலின் மரணத்தினால்

(03) "நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்து கொள்ளாதீர்"
"அஞ்சாதே பேசிக்கொண்டே இரு"
"ஆண்டவரே இப்பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்"
இக்கூற்றுக்களோடு தொடர்புடையவர்கள்
1) ஸ்தேவான், பேதுரு  2) யோவான், பேதுரு  3) பவுல், சீலா
4) பவுல், பிலிப்பு  5) பவுல், ஸ்தேவான்

(04) அப்பம் பிடுதல் என்பது ........................................ குறிக்கும்.
1) நற்கருணையைக்  2) ஒற்றுமையைக்  3) செபிப்பதைக்
4) நட்புடன் உறவாடுதலைக்  5) அப்போஸ்தலரின் வாழ்க்கை முறையைக்

(05) தெர்தூலியன் பேரரசன் தொம்சியனை ........................................ என அழைத்தார்.
1) விடுதலையின் வீரன்  2) நீரோ என்ற கொடிய மிருகத்தின் பாதி  3) கொடிய மிருகம்
4) மீட்டுத்தருபவன்  5) கிறிஸ்தவர்களின் எதிரி

(06) இயுத்திக்கேய பேதகத்திற்கு எதிராகக் கூட்டப்பட்ட திருச்சபையின் 4 வது பொதுச்சங்கம்
1) எபேசு சங்கம்  2) ஜெருசலேம் சங்கம்  3) நிசேயா சங்கம்
4) திரிதெந்தீன் சங்கம்  5) கல்செடோன் சங்கம்

(07) A - 50,000 , B - 6,000
C - 40,000 , D - 600,000
E - 700,000
முதல் சிலுவைப் போரில் பங்கெடுத்தவர்கள் தொகை,
1) A  2) B  3) C
4) D  5) E



agaram.lk
Scanned with CamScanner

(08) துறவிகளை "கிறிஸ்துவின் மந்தையில் உன்னத பாகம் அன்னைத் திருச்சபையின் அழகிய மலர்" என்று கூறியவர்

1) தெர்தாலியன்
2) தேப்ஸ் சின்னப்பர்
3) சிப்ரியன்
4) வனத்து அந்தோனியார்
5) அலெக்சாந்திரிய சாந்தப்பர்

(09) துறவற குழு வாழ்வின் ஸ்தாபகர் ..................................... ஆவார்.

1) புனித பேதுரு
2) புனித பக்கோமியுஸ்
3) புனித பசில்
4) புனித இரெனியுஸ்
5) புனித ஆசீர்வாதப்பர்

(10) மரியன்னைக்காக அர்ப்பணிக்கப்பட்ட துறவறசபை,

1) சிஸ்ரேஷியன் துறவறசபை
2) ஆசீர்வாதப்பர் துறவறசபை
3) டொமினிக்கன் துறவறசபை
4) குளுனி துறவறசபை
5) அகுஸ்தீனார் துறவறசபை

(11) "லயன்சின் ஏழை மனிதர்கள்" என தம்மை அறிமுகம் செய்த இரவலர் சபை

1) கார்மேல்துறவறசபை
2) வல்தேசியன்துறவறசபை
3) டொமினிக்கன் துறவறசபை
4) பிரான்சிஸ்கன் துறவறசபை
5) அகுஸ்தீனார் துறவறசபை

(12) - கசினோ மலையில் அவர் ஸ்தாபித்த துறவற மடம் உலகப் புகழ் பெற்றது
- செபமும், வேலையும் என்பது சபையின் விருதுவாக்கு
- இவரது துறவிகள் செபம், கல்வி, மறைபணி, வேலை என்பவற்றில் தம் நேரத்தை செலவிட்டனர்

இக்கூற்றுடன் தொடர்புடைய துறவி

1) புனித ஆசீர்வாதப்பர்
2) புனித கிரகோரி
3) புனித அகுஸ்தீனார்
4) புனித பசில்
5) புனித தேப்ஸ் சின்னப்பர்

(13) A - கிறிஸ்துவின் படையமைப்பு - டொமினிக்கன்சபை
B - புனித ஒடோ - பிரான்சிஸ்கன் சபை
C - குழுவாழ்வு, செபம், தோட்ட வேலை, வீட்டுவேலை - சிஸ்ரேஷியன் துறவறசபை
D - போதகதுறவியர் சபை - சிஸ்ரேஷியன் துறவறசபை

மேற்கூறப்பட்டுள்ளவற்றில் சரியானவை

1) BC
2) AD
3) AC
4) CD
5) AB

agaram.lk

(14) பீற்றர் வால்டோ தன் போதனைப் பணியை வெளிப்படையாக ஆரம்பித்த ஆண்டு

1) 1172
2) 1175
3) 1184
4) 1180
5) 1176

(15) 1098ம் ஆண்டு சித்தே எனும் ஊரில் தோற்றம் பெற்று புனித கார்டிங்முடியப்பரை தாபகராக கொண்ட துறவற சபை

1) ஆசீர்வாதப்பர் சபை
2) யேசு சபை
3) கார்மேல் சபை
4) சிஸ்ரேஷியன் சபை
5) கப்புச்சின் சபை

(16) திருச்சபையின் வரலாற்றிலே இருள் சூழ்ந்த காலமாகக் கணிக்கப்படுவது

1) கி. பி 900 - 1500
2) கி. பி. 700 - 1500
3) கி. பி 800 - 1500
4) கி. பி 90 - 100
5) கி. பி 1500 - 1600

(17) - அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து செப, ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டார்.
- ஒருவன் விசுவாசத்தினால் மட்டும் மீட்படைகிறான்.

இக்கூற்றுக்களோடு தொடர்புடைய சீர்திருத்தவாதி

1) மாட்டின்லூதர்
2) ஜோண்கல்வின்
3) தோமஸ் முன்சர்
4) எட்டாம் கென்றி
5) வில்லியம் கேரி

(18) பெண்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தவர் யார்?

1) 8ம் கென்றி
2) மாட்டீன்லூதர்
3) சுவிங்ளி
4) ஜேண்கல்வின்
5) தோமஸ்முன்ற்சர்

| சீர்திருத்தவாதிகள் | ஆண்டு |
|---|---|
| A - மார்டின் லூதர் | 1488 - 1525 |
| B - சுவிங்ளி | 1484 - 1531 |
| C - ஜோண் கல்வின் | 1509 - 1564 |
| D - தோமஸ் முன்ற்சர் | 1483 - 1546 |

மேற்தரப்பட்ட தரவில் சரியானது எது?

1) A, B
2) C, D
3) A, D
4) B, C
5) B, D

"நியான தேவதைகளின் ஆலயங்களும், வழிபாடுகளும் நிறைந்து இருந்தன" இக்கூற்று தொடர்பான இடம்

1) எதென்ஸ்
2) எபேசு
3) பிலிப்பு
4) அலெக்சாந்திரியா
5) கொரிந்து

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

பகுதி 'அ' இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும், பகுதி 'ஆ' இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 4 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி "அ"

1) i) பேதுரு ஆற்றிய மறையுரையின் மையக் கருத்துக்களை சுருக்கமாகத் தருக.
ii) ஜெருசலேமிற்கு வெளியே சமாரியாவில் திருச்சபை பரவிய விதத்தினைத் தருக.
iii) ஜெருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான பின்னணி 4 தருக.
iv) திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டமைக்கான காரணங்களைக் கூறி அவர்களின் பெயர்களையும் தருக.
v) உரோமைக் கலாபனை தோன்றியமைக்கான காரணங்கள் 4 தருக. (20 புள்ளிகள்)

2) i) பேதகம் என்றால் என்ன?
பேதகங்களினால் திருச்சபைக்கு கிட்டிய நன்மைகள் 3 தருக.
ii) பேதகங்களை கண்டிக்கும் முகமாகவும் விளக்கமளிக்கும் முகமாகவும் தோற்றம் பெற்ற சங்கங்கள் எவை?
iii) அயர்லாந்தை மனந்திருப்புவதில் பத்திரிசியார் மேற்கொண்ட மறைப்பணிகள் 4 தருக.
iv) 5ம் கலாபனையையும், அதற்கு காரணமான அரசனையும், அவனது கொள்கைகளையும் தருக.
v) மகாகிரகோரியாரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 4 தருக (20 புள்ளிகள்)

3) i) துறவற வாழ்வின் படிநிலைகளைத் தருக.
ii) தபோதனர், ஏகாந்திகள் என்போர் யாவர்?
iii) புனித பசில், புனித அசீர்வாதப்பரால் எழுதப்பட்ட சட்ட ஒழுங்குக் கோவையில் உள்ள அம்சங்கள் எவை?
iv) குளூணி துறவற சபையின் மிகப் புகழ்பெற்ற தலைவர்கள் நால்வரின் பெயரைத் தருக.
v) இரவலர் சபைகள் தோற்றம் பெற்றதற்கான பின்னணி யாது? (20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

## பகுதி "ஆ"

(04) i) சிஸ்ரேசியன் துறவற சபையின் ஆரம்பம் பற்றி விளக்குக.

ii) இச்சபையினால் சமுதாயத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளை விளக்குக.

iii) ஆசீர்வாதப்பர் துறவற சபையின் ஆரம்பமும், வளர்ச்சியும் பற்றிய முக்கிய விடயங்க ஆராய்க.

iv) வல்தேசியன் துறவறசபை உருவாக ஏதுவான சூழ்நிலையை விளக்குக.

(20 புள்ளிக

(05) i) திருச்சபை வரலாற்றிலே மத்தியகாலம் இருள் சூழ்ந்த காலமாக காணப்பட்டமைக்கா காரணங்களை ஆராய்க.

ii) மாட்டீன்லூதரின் போதனையின் மையக் கருத்துக்களை விளக்குக.

iii) தேவதாய்க்கும், திருப்பயணத்திற்கும் எதிராக போதித்த சீர்திருத்தவாதி யார்? அவர் போதனையின் மையக் கருத்துக்களை விளக்குக.

iv) புரட்டஸ்தாந்து சீர்திருத்த சபைகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை ஆராய்க

(20 புள்ளிக

(06) i) புரட்டஸ்தாந்து புரட்சியினால் திருச்சபைக்கு ஏற்பட்ட தீமைகளை ஆராய்க.

ii) மெதடிஸ்த சபையினால் ஏற்பட்ட நன்மைகளை விளக்குக.

iii) திரிதெந்தீன் சங்க தீர்மானங்களை விளக்குக.

iv) வில்லியம் கேரி தோற்றுவித்த பப்ரிஸ்ற் சபையினது படிப்பினைகளை ஆராய்க.

(20 புள்ளிகள்

(07) i) நீரோ மன்னன் காலத்து கலாபனையை விளக்குக.

ii) பவுலின் 2வது மறைதூதுப் பயணத்தின் அடிப்படையில் எதென்ஸ் நகரில் நடைபெற் மறைதூதுப் பணியினை விளக்குக.

iii) நெஸ்தோரிய பேதகம் பற்றி சிறு விளக்கவுரை தருக.

iv) பெந்தக்கோஸ்தே நிகழ்வை பாபேல் கோபுர நிகழ்வுடன் ஒப்பிட்டு விளக்குக.

(20 புள்ளிகள்

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

# Term Examination, March - 2016

கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017)

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1) | 3 | 11) | 2 |
| 2) | 4 | 12) | 1 |
| 3) | 5 | 13) | 3 |
| 4) | 1 | 14) | 5 |
| 5) | 2 | 15) | 4 |
| 6) | 5 | 16) | 3 |
| 7) | 4 | 17) | 1 |
| 8) | 3 | 18) | 5 |
| 9) | 2 | 19) | 4 |
| 10) | 1 | 20) | 2 |

## பகுதி - II

### பகுதி - "அ"

i)
- இயேசுவே இறைவனால் வாக்களிக்கப்பட்டு, முன்னறிவிக்கப்பட்ட மெசியா
- இந்த யேசுவை நீங்கள் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்
- ஆனால் கடவுள் அவரை மரண வேதனையில் இருந்து விடுவித்து உயிர்த்தெழச் செய்தார்
- இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்

ii)
- ஸ்தேவானின் கொலை ஒரு பெரிய யூத கலாபனையின் ஆரம்பமாய் அமைந்தது
- ஜெருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் வெளியேறி நாலா பக்கமும் சிதறுண்டு யூதேயா சமாரியா பகுதிகளுக்குச் சென்று நற்செய்தி அறிவித்தனர்
- பிலிப்பி சமாரியாவிற்குச் சென்று அவர்களுக்கு நற்செய்தி அறிவித்து பல அற்புதங்களையும், அறிகுறிகளையும் செய்தார்
- மந்திரவாதியான சீமோன் பிலிப்புவினால் மனமாற்றப்பட்டார்
- எத்தியோப்பிய அன்னகன் காசாவில் வைத்து மனமாற்றப்பட்டு திருமுழுக்குப் பெற்றார்

iii) படிப்படியாக புறவினமயமாக திருச்சபையில் பெரும் பிரச்சனை உருவாகியது அதாவது கிறிஸ்தவம் ஒரு தனி மதமா? அல்லது யூத மதத்தின் கிளையா? புறவினத்தவர்கள் திருச்சபையில் சேரும் போது யூதனாக மாற வேண்டுமா? அவர்கள் மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமா? என்ற வினாக்களுக்கு விடை காணும் பொருட்டு ஜெருசலேம் சங்கம் கூட்டப்பட்டது

iv)
- கிரேக்கமொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் தம் கைம்பெண்கள் அன்றாடம் பந்தியில் கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைத்தமை
- பந்தி பரிமாற ஆட்கள் போதாமை

ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கானோர், தீமோன், பர்மனா, நிக்கொலா

v)
- கிறிஸ்தவர்கள் தங்கள் கடவுளே உண்மைக்கடவுள் என்றும், ஏனைய கடவுளை மறுத்து விக்கிரக அவற்றை தீயசக்திகள் எனக் கூறி, அவற்றிற்கு பலி செலுத்துவதை ஆராதனையாகக் கொண்டனர்.



agaram.lk
Scanned with CamScanner

- கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை இரவில் இரகசியமாக ஒன்றுகூடி நிலக்கல்லறைகளிலும், சுரங்கங்களிலும், நடத்தினர். அவர்கள் துர்நடத்தைக்காகவே இவ்வாறு கூடுவதாக குற்றம் சுமத்தப்பட்டனர்.
- கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உடல் இரத்தப்பலியில் பங்கு கொள்வதைப் பற்றி தப்பான கருத்துக்களை முன்வைத்து குழந்தைகளை பலியிடுவதாகவும், அவர்களின் உடலையும், இரத்தத்தையும் உண்பதாக பழி சுமத்தப்பட்டனர்.
- கிறிஸ்தவர்கள் உரோமையப் பேரரர்க்கு தூபம் காட்ட கடவுளாக மதிக்க மறுத்தமை

2) i)
- திருச்சபைக்கு எதிரான தப்பறையான போதகமே பேதகம் எனப்படும். அதாவது திருச்சபையின் மரபு முறைப் போதனைகளுக்கும், கிறிஸ்தவ சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கும் ஒவ்வாத படிப்பினைகள் பேதகம் என்கின்றோம்.
- திருச்சபை பலப்படுத்தப்பட்டு அதன் போதனை உறுதிப்படுத்தப்பட்டது.
- திருச்சபையின் விசுவாசப் பிரமாணங்கள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்பட்டு விளக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- பேதகங்களுக்கு எதிராக கூட்டப்பட்ட சங்கங்கள் விசுவாசத்தை ஏற்படுத்தி மறையை வளர்க்க உதவியாய் இருந்தது
- பேதகங்கள் திருச்சபையை பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதற்கு சாதகமாக அமைந்தன.

ii)
- நிசேயா பொதுச்சங்கம் - *325*
- எபேசு பொதுச்சங்கம் - *431*
- கல்செடோன் சங்கம் - *451*
- கொன்ஸ்தாந்திநோபிள் - *381*

iii)
- ஆலயம் கட்டினார்
- சுதேச குருக்களின் உருவாக்கல்
- மறைமாவட்டங்கள் அமைத்தல்
- ஆலயத்தைக் கட்டினார்
- பலம் படைத்த தலைவன் திக்சுவை மனந்திருப்பினார்

iv)
- 5ம் கலாபனைக்காலம் - கி.பி 202 - 211 அரசன் செப்திமுஸ் செவரஸ்
- இவன் புதிதாக எவரும் திருமுழுக்கு பெறக்கூடாது
- விருத்தசேதனம் செய்யக்கூடாது
- புதிதாக கிறிஸ்தவத்தை தழுவுபவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்
- அவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்

v)
- துறவியர் மடங்களை அமைத்தல்
- ஏழைகளுக்கு உதவி செய்தல்
- இசைக்கு முக்கியத்துவம் வழங்கினார்
- திருச்சபையின் ஆட்சி ஆளுகையின் உரிமைகள், கடமைகள் என்பவற்றை வரையறுத்தார்.

3) i) தபோதனர், ஏகாநீதிகள் / வனத்துப்பிதாக்கள், துறவிகள், துறவறக்குழு வாழ்வு, து... பொது வாழ்வு

ii)
- பரிசுத்தத்தனத்தை நிறைவாக வாழப்போவதாக வாக்களித்து தத்தம் வீடுகளில் இ... கொண்டே திருமண வாழ்வைத் துறந்து, விரதத்துவத்தை அனுசரித்து, பலவ... ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்தவர்கள், தபோதனர் அழைக்கப்பட்டனர்.
- வனாந்தரங்களில் சிறு கொட்டில்கள், குடிசைகளை அமைத்து எவருடனும் எத்தொடர்புமின்றி தனித்தனியே வாழ்ந்தவர்கள் ஏகாந்திகள் என அழைக்கப்பட்ட...



agaram.lk
Scanned with CamScanner

iii) - தமக்குள் அனைத்தையும் துறத்தல்
- நீண்ட நேரம் செபம் செய்தல்
- கீழ்படிதல், தூய்மை
- உடல் உழைப்பு
- உபவாசம் இருத்தல்
- இறைவார்த்தையை ஆழமாக தியானித்தல்
- ஒரே இல்லத்தில் வாழுதல்

iv) புனித ஒடோ
புனித ஒடில்லோ
புனித கியூ
புனித றொமோல்ட்
புனித பேதுரு தமியான்

v) - திருச்சபையின் தலைவர்கள் சிலுவைப்போர்கள், பேரசுடன் மோதல்கள் போன்றவற்றில் தம் கவனத்தைச் செலுத்தினர்
- துறவிகள் ஆன்மீகத்தை விடுத்து லௌகீகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்
- துறவிகள் நுன்மாதிரிகையான வாழ்க்கை வாழ்ந்தனர்
- துறவிகளின் ஆடம்பர வாழ்வு இந்நிலையை நீக்க இரவல் சபைகள் தோற்றம் பெற்றன.

## பகுதி "ஆ"

4) i) ஆசீர்வாதப்பர் சபையின் பழைய நிலைமாறி பலவிதமான சீர்கேடுகள் நுழைந்த காலத்தில் பலர் ஆசீர்வாதப்பரின் சட்ட ஒழுங்குகளே வேண்டுமென விரும்பினர். இதன் விளைவாக ஆரம்பிக்கப்பட்டதே சிஸ்ரேஷியன் துறவற சபையாகும். 1098ம் ஆண்டு புனித ஆசீர்வாதப்பர் திருநாளன்று தலைமைத் துறவியார், ராபட்மோலஸ்மஸ் என்ற இடத்தில் இருந்து துறவிகள் வெளியேறி பர்கண்டியில் சித்தியோ என்ற ஊரில் ஆரம்பித்தார்.

ii) - மனித உழைப்பு முக்கியத்துவம்
- பல நாடுகளில் துறவற மடங்கள் கட்டப்பட்டன.
- திருச்சபையின் சீர்கேடுகள் புனருத்தானம் செய்யப்பட்டன.
- சட்ட ஒழுங்குகள் நுணுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தியமை
- ஐரோப்பா முழுவதும் தொழிநுட்பம் வரை உதவினர்.

iii) - புனித ஆசீர்வாதப்பரால் ஆரம்பிக்கப்பட்டது.
- இவர் மொன்ரோ கசினோ என்னுமிடத்தில் துறவற மடத்தை ஆரம்பித்தார்.
- துறவிகளுக்கான ஒழுங்கு நூலை எழுதினார்
- செபம், வேலை முக்கியத்துவம்
- கல்விப் பணியாற்றினார்
- ஐரோப்பிய கலாச்சாரத்தை உருவாக்கினார்

iv) - பிரான்ஸ் லயன்சில் பீட்டர் வால்டோ என்பவரின் செயற்போக்குக் காரணமாக வல்தேசியன் ஆரம்பிக்கப்பட்டது.
- அநியாய வட்டிக்கு பணம், கடன் கொடுத்து வாழ்ந்த செல்வந்த வியாபாரி,
- மத் 19 : 21 நற்செய்தி வசனம் அவரின் வாழ்வை மாற்றியது
- இறைவார்த்தையின்படி ஆன்மீக வாழ்வை வளப்படுத்தினார்
- இதனால் இவரைப் பின் தொடர்ந்து பலர் பெயருடன் மக்கள் மத்தியில் சேவையில் ஈடுபட்டனர்.

5) i)
துறவிகள் துறவறத்தையும், விசுவாசத்தையும் கைவிட்டு, பணம் சேகரிப்பதிலும் அரசியல் லாபத்தை தேடுவதிலும் ஈடுபட்டனர்
ஒன்றுக்கு மேற்பட்ட பாப்பரசர்கள் காணப்பட்டமை
மறை தொடர்பான அதிகாரம் அரசனிடம் காணப்பட்டமை
ஒரு மறைமாவட்டத்திற்கு 2 ஆயர்கள் காணப்பட்டமை
பரிபூரண பலன்கள் விலைக்கு விற்கப்பட்டது
திருச்சபை வாணிபத்தளமாக மாறியது

ii) "நம்பிக்கையால் மட்டுமே ஒருவன் மீட்படைய முடியும்" என்ற பவுலின் கூற்றை முன்வைத்தார்.
பரிபூரணபலன் பற்றிய திருச்சபையின் போதனையை எதிர்த்தார்
வானதூதர், உத்தரிப்பு தலம் இல்லை என வாதிட்டார்
திருமுழுக்கு, நற்கருணை ஆகிய திருவருட்சாதனங்களை மட்டும் ஏற்றுக்கொண்டார்
துறவிகள் துறவற உடையைக்களைந்து திருமணம் செய்ய வேண்டும் எனக் கூறினார்
அரசர்களே யேசுவின் வாரிசுகள்


agaram.lk
Scanned with CamScanner

iii) கவிங்ளின்
விசுவாசத்தின் ஒரே சட்டம் விவிலியம்
சென்ம பாவம் மனிதனின் விருப்பை அழித்து அவனைத் தீமை செய்யத் தூண்டுகிறது
துறவற வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை,
உத்தரிப்புத்தலம் பற்றிய திருச்சபையின் கருத்துக்களை எதிர்த்தார்.
திருவருட்சாதனங்கள் வெறும் அடையாளங்களே
நற்கருணையில் இயேசு இல்லை, அது ஒரு நினைவு அடையாளம்
தந்தைக்கு சமமானவர் அல்லர்

iv) மத்திய காலத்தில் ஆன்மீக புத்தணர்ச்சி தோன்றி வளரத்தொடங்கியது
திருத்தந்தையர் பணத்திற்காக ஆன்மீக சொத்துக்களை விற்றனர்
குருக்களும், திருத்தொண்டர்களும் போதிய கல்வியறிவு பெற்றிருக்கவில்லை
சிலர் தம் தூய்மை வாழ்விற்கு எதிராகச் செயற்பட்டனர்
மக்களிடம் இருந்து மிதமிஞ்சிய வரி வசூலிக்கப்பட்டது
ஒரு ஆயருக்கு 2, 3 மறைமாவட்டங்கள் காணப்பட்டன.
பொதுநிலையினர் மறை அறிவின்றி விசுவாசத்தில் நலிந்தவர்களாய் வாழ்ந்தனர்.

6) i) ஐரோப்பாவின் அரைப்பகுதியை திருச்சபையில் இருந்து பிரித்தது
திருச்சபை ஆயிரக்கணக்கான குருக்கள், துறவிகள், கன்னியரை இழந்தது
திருச்சபையின் மறைக்கொள்கையில் குழப்பம்
நிதித்துறையில் துஸ்பிரயோகம்
மறையுண்மைகளைப் பற்றி அறியாமை
திருச்சபையின் தலைவர்களின் ஒழுக்க சீர்கேடுகள்
ஆட்சி நிர்வாகத்தில் ஆட்சி மோசடிகள்

ii) மெதடிஸ்த சபையினர் தூய்மைவாதிகள் என அழைக்கப்பட்டனர்
அவர்களின் புகழ் எங்கும் பரவியது
இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற இடங்களில் சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்ட
சிறுவரை கிறிஸ்துவின் வழியில் வளர்ப்பதிலும், நெறி வாழ்க்கையை போதிப்பதிலும்
கவனம் செலுத்தினர்
ஓய்வு நாள் பாடசாலையை உருவாக்கினர்

iii) விவிலியம், பாரம்பரியம் இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று
பேதுருவும் அவர் வழி வந்தவர்களும் திருச்சபையின் தலைவர்கள்
ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களிலேயே தங்கி போதனை செய்ய வேண்டும்
குருக்கள் தம் பங்கு மக்களை மதக்கொள்கைகளில் பயிற்றுவிக்க வேண்டும்

iv) கடவுளிடமிருந்து பெருங்காரியங்களை எதிர்பாருங்கள்
கடவுளுக்காக பெரங்காரியங்களை முயற்சியுங்கள்
கடவுளை அறியாதோர் மத்தியில் நற்செய்திப் பணியாற்றுங்கள்
திருவிவிலியத்தை இந்திய மொழிகளில் வெளியிட்டு விவிலியம் படிப்பதற்கு உதவியது

7) i) நீரோ மன்னன் காலத்து கலாபனைக் காலம் - கி.பி 64 - 65
நீரோ என்னும் கொடிய மன்னன் நெருப்பு எரிவதைப் பார்க்க அவனுக்கிருந்த ஆசையை
திருப்தி செய்ய உரோமை நகருக்கே தீ வைத்தான். இவ்வாறான கருத்துக்கள்
வேதசாட்சிகள் :- பேதுரு, பவுல்

ii) அறிவுப்பசி உடைய மக்கள் வாழ்ந்த எதென்ஸ் நகரில் பல தெய்வ வழிபாடும்,
மெய்யியல் சிந்தனைகள் பலவும் இருந்தன.
(எப்பிக்கூரர், ஸ்தொயிக்கர்) இங்கு அரயோப்பாகு மண்டபத்திலுள்ள "அறியாத
தெய்வத்திற்கு" எனும் பீடத்தை முன்னிலைப்படுத்தி கிறிஸ்துவை அறிவித்தார்.
தனது போதனையில் கிரேக்க ஞானிகள் கவிஞர்களை மேற்கோள் காட்டினர்

iii) கொன்ஸ்தாந்திநோபிள் ஆயர் நெஸ்தோரியர் "இயேசு இரண்டு ஆட்களாக
இருக்கின்றார்", என்றும் மனிதக் கிறிஸ்து கடவுள் அல்ல என்றும் தப்பறையை
வெளியிட்டார் கி.பி 431ல் கூடிய எபேசு சங்கம் இப்பேதகத்தைக் கண்டித்தது.

iv) பாபேல்கோபுர நிகழ்வில் - மொழிக்குழப்பம்
பெந்தக்கோஸ்தே விழாவில் - ஒரு மொழியில் விளங்கியமை
விளக்கியிருப்பின் புள்ளி வழங்கவும்.



agaram.lk

Scanned with CamScanner